[1982 மார்ச் 15

ஒழுங்கு பிரச்சனை

பேரவைக் கூட்டம் நடைபெறுகையில் நீதிவிசாரணை குறித்து பேரவையில் அறிவிக்காது, வெளியில் அறிவிப்பது

* திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய கவனத்தையும், கவலையையும் கடந்த 10, 20 நாட்களாக ஈர்த்துக்கொண்டிருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்திலே விரும்பத்தகாத வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நம்முடைய கவனத்தை ஈர்க்கின்ற இந்தப் பிரச்சினைப் பற்றி இந்த மாமன்றத்தில் கழிந்த 3-ந் தேதி ஒத்திவைப்புத் தீர்மானம் மூலமாகவும், சனிக்கிழமை அன்று இந்த மாமன்றத்திலே இருக்கின்ற பல்வேறு கட்சித் தலைவர்களால் தமிழக மக்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே அரைமணி நேர விவாதம் நடைபெற்ற நேரத்திலும் சரி, அங்கே நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் சம்பந்தமாகவும் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாகவும், அரசாங்கம் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று பல்வேறு சமயங்களிலும் சொன்ன நேரத்திலும் கூட, இந்த மன்றம் கூடி இருக்கின்ற இந்த நேரத்தில் அதை இங்கே அறிவிக்காமல் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி சென்று அரசு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யும் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் இதிலே நாம் கொண்டிருக்கின்ற அக்கறை காரணமாக இந்த முக்கியமான அறிவிப்பினை மன்றம் கூடிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே மன்றத்திலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் கேட்டுக் கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையிலே அரசாங்கம் ஏன் இங்கே சொல்லாமல் அங்கே சென்று சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஏற்பட்டிருக்கின்ற சேதம், நட்டம் பொறுத்த அளவிலே அங்கே போகாமலே நமக்கு இங்கேயே தெரியும்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நீதி விசாரணை பற்றி அறிவித்த அறிவிப்பு முக்கியமானது என்றும், அதை சட்டமன்றத்திலே முதலிலே அறிவித்து இருக்கவேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அது முக்கியமான அறிவிப்பு என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் சட்ட சபையிலே அறிவிக்க வேண்டியது இயல்புதான். ஆனால் எந்த நேரத்தில் எத்தகைய சூழ்நிலையில் எப்படி அறிவிக்கப்பட்டது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மிகுந்த கவலை தருகின்ற காரணத்தினால் சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தந்

தார்கள். அரைமணி நேர விவாதத்திற்கும் அனுமதி தந்தார்கள். அதனை ஒட்டி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சென்று அங்கே சம்பந்தப்பட்ட வர்களைச் சந்தித்து, கலவரப்பகுதியில் ஒரு அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலையிலே சென்றார்கள். ஆகவே, கலவரத்தை அமைதிப்படுத்த வேண்டும் ; அங்கே வன்முறை இருக்கக்கூடாது என்பதுதான் இந்த பேரவை உறுப்பினர்களுடைய தலையாய நோக்கமாகும். அந்த நோக்கத்தை இந்த அளவுக்கு உடனுக் குடன் நிறைவேற்றுகிற இந்த அரசு பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆகவே அங்கே ஒரு அமைதியான சூழ் நிலையை இந்த அறிவிப்பின் மூலம் உருவாக்க முடியும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்பி, நீதிவிசாரணை போடு வோம் என்று சொன்னால் அதன் மூலம் மேற்கொண்டு கலவரங்கள் நடக்காமல் இருக்க பேருதவியாக இருக்கும் என்று கருதி அறி வித்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அந்த நேரத்தில் இங்கே சட்டமன்ற கூட்ட மும் இல்லை. நாம் எல்லோரும் அமைதிதான் முக்கியம் என்று கருதுகிறோமே தவிர, நம்முடைய சட்டமன்ற விதிமுறைகள், மரபுகளை முக்கியமாக கருதி கலவரத்தை நீடிக்க நிச்சயமாக நாம் யாரும் விரும்பமாட்டோம். ஒருவர் வீட்டிலே இன்னொரு வர் புகுவது அத்துமீறல் தான். ஆனால் வீடு தீப்பற்றி எரியும் போது எல்லோரும் சேர்ந்து அதை அணைக்கிறோம். ஆகையால் இத்தகைய அறிவிப்பை ஒருநாள் கழித்து இங்கே வந்து அறி விப்பதை விட அங்கே அறிவித்து நிலைமை சுமூகப்படுமானால் அதைத்தான் நாம் வரவேற்க வேண்டுமே தவிர, சில நேரங்களில் சில பிரச்சினைகளைத் தவிர்க்க, சுமூக சூழ்நிலையை உருவாக்க தவிர்க்க முடியாமல் இத்தகைய அறிவிப்பு செய்வதை சட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்ட வேண்டுமே தவிர தங்களுக்குத்தான் முதலில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்பது எந்தவகையிலும் பொருத்தம் அல்ல என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : சார், மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் அங்கே சென்று சமாதானம் பேசிக்கொண் டிருக்கும் போது கூட பக்கத்து கிராமத்தில் பெரிய கலவரம் ஏற் பட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. இப்போது அங்கே நிலைமை எப்படி இருக்கிறது ? கலவரம் அடங்கி இருக்கிறதா ? அல்லது தொடர்ந்து நடக்கிறதா ? இதற்கு யார் காரணம் என்பதுபற்றி அரசாங்கம் இந்த அவையிலே அறிவிக்க இயலுமா ?

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்ற பிறகு அன்றுகூட பதில் சொல்லவில்லை. அங்கே போய் நிலைமைகள் பற்றி விவாதித்த பின் அரசாங்கத்தின் நடவடிக்கைபற்றி ஒரு அறிக்கை இந்தச் சபை முன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே அறிக்கை ஒன்றை அவை முன் வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கூட சட்டமன்றத்தில் எடுத்துக் கொள்ள விதிமுறை இல்லை. ஆனாலும் எல்லா உறுப்பினர்களும், எதிர்க் கட்சித் தலைவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரை மணி நேர விவாதம் வைத்து, ஏறத்தாழ ஒன்றேகால் மணி நேர விவாதம் நடந்து. அதன் விளைவாக இங்கே இருக்கிற வேகத்தையும் பார்க்கவேண்டியிருக்கிறது, அங்கே இருக்கிற சூழ்நிலையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகையால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே புறப்பட்டுச் சென்றார்கள். அங்கே சென்றபிறகு, இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டால் சுமூக சூழ்நிலை ஏற்படும் என்று உணர்ந்ததால் அங்கே நீதி விசாரணை பற்றி அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்ததைப்போல அது வரவேற்கக்கூடியதே தவிர அது விவாதத்திற்குரியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழ்நாடு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக தமிழ் தெரியாத ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆண்டித்தேவர், என். பழனிவேல், ப. நெடுமாறன், என். எஸ் வி. சித்தன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம், ரா. உமாநாத், ரா. கிருஷ்ணன், செ. சிவசாமி, சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, மு, அப்பாதுரை, குமரி அனந்தன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், எஸ். என். இராமசாமி, என். சங்கரய்யா, என். வரதராஜன், கு. ரமணி, அ. ரகுமான்கான். என்.வி.என். சோமு ஆகியோர் ‘‘ திரு. கே.பி.என். சிங் அவர்களை பீகார் மாநிலத்திலிருந்து தமிழ்நாடு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக நியமித்துள்ளதால் தமிழ்மொழி நீதி மன்ற மொழியாகத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருப்பதற்கு முரணாக இருப்பதால் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் ’’ என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. எஸ். ஆண்டித்தேவர் இருக்கையில் இல்லாததால் முதலில் திரு. என். சங்கரய்யா அவர்கள்·